# இப்போதும் ரோபோவாக இருக்கப் போவதில்லை!

கணையாழி தலையங்கம்

செயற்கை நுண்ணறிவில்
மனித குலத்தை ரோபோ ஆக்க
வந்துகொண்டு இருக்கின்றன
புதுப் புது ரோபோக்கள்!

காலம் காலமாகக்
கடவுள், சாதி, மதம், சமுதாயம்
எல்லாமே
மனிதர்களை ரோபோ ஆக்க
மனித குலம் கட்டமைத்த
ரோபோக்கள் தாமோ?

அவனின்றி ஓர் அணுவும் அசையாது!
அப்படியெனில்
நம்மை இயக்குவது எது?

சொர்க்கத்துக்குப் போக
ஆசைப்பட்டுக்
கும்பமேளாக் குளியலில்
உயிர் விடும் மக்களை
உசுப்பிவிடும் ரோபோ எது?

பாவம் செய்யாதிருக்க
வழி தேடுவதை விட்டுவிட்டுப்
பாவத்தைக் கரைக்க
நதியும் நாளும் வேண்டி
ஓடிக்கொண்டிருக்கும்
உயிர் ரோபோக்களை
என்ன சொல்ல?

யோசித்துப் பார்த்தால்
யார் ரோபோ?
நாம் ரோபோவை இயக்குகிறோமா?
அல்லது
நம்மை ரோபோ இயக்குகிறதா?

அடுத்தவரையோ அடுத்த நாட்டையோ
ரோபா ஆக்க
ஆசைப்படுகிற உலகில்
ஒவ்வொருவரும் நான்
ரோபோ இல்லை என்பதைக் காட்ட
சிந்திக்க வேண்டியிருக்கிறது.

குடும்பம், சமுதாயம் என
நாமும் கூட பல நேரங்களில்
ரோபோ தான்!

விழுமியம் கொண்ட சமுதாயத்திற்கு
மக்கள்
ரோபோவாக இருக்கலாம்!

நல்ல தலைமைக்கு
மாற்றப்பட வேண்டிய
சமுதாயம் கூட
ரோபோவாக இருக்கலாம்!

ஆனாலும்
நாம் ரோபோவா?
அல்லது
நம்மை இயக்குவது ரோபோவா?
தெரிந்து கொண்டு இயங்கத்
தெளிவு வேண்டும்!

பறவை, விலங்குகளைப் போலக்
கிடைத்ததை உண்டு
மரத்திலும் குகையிலும்
அச்சத்தில் கிடந்த
ஆதி மனிதர்களின் உதவிக்குக்
கல்லும் மரமும் நெருப்பும் நீரும்
கைக்குக் கிடைத்த போது
விலங்கும் பறவைகளும் கூட
அவர்களுக்கு
ரோபோ ஆகியிருக்கலாம்!

மண்ணைப் பிசைந்து
பானை சுட்ட போது
இரும்பைக் கண்டறிந்த
“கலம் செய் கோ” வுக்குச்
சக்கரம் ரோபோ ஆகியிருக்கலாம்!

இரும்பு கைவசப்பட்ட போது
இவன் பயந்து பயந்து
ஓடிய விலங்குகள்
இவனுக்குப் பயந்த
ரோபோ ஆகியிருக்கலாம்!

மேலும் மேலும்
புதுப் புது ரோபோக்களை
இறக்குமதி செய்து
மனிதர்களை ரோபோவாக
மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்!

ஆனாலும்
மனித குலம் முழுவதையும்
ரோபோ ஆக்க
இதுவரை வரவில்லை
எந்த ரோபோவும்!

இயக்குவதைக் காட்டாமல்
இயங்கிக் கொண்டிருக்கும்
ரோபோக்கள் சில
சிந்திக்கச் சொன்ன பெரியாரையும்
வம்புக்கு இழுக்கின்றன!

சாதி, மதம், கடவுள் என்று
மனித குலத்தை ரோபோ ஆக
மாற்றிக் கொண்டிருந்த
ரோபோக்களையே
மாற்ற முயன்றவர்கள்
நாங்கள் ரோபோ இல்லை என்பதை
நாட்டுக்கு உணர்த்தினார்கள்.

சமுதாய ரோபோவாக
இருந்து கொண்டே
திருவள்ளுவரைப் போலப்
பெரியாரைப் போல
அதையும்
எதிர்க்கவும் மாற்றவும் இயக்கவும்
மனித குலத்திற்கு
வாய்ப்பு இருப்பதைக்
காட்டி இருக்கிறார்கள்!

அதிகார அமைப்புகள்
மக்களை ரோபோவாக
மாற்ற நினைக்கிற போது எல்லாம்
நாங்கள் உங்களுக்கு
ரோபோ இல்லை என்று
எதிர்க்கின்ற போக்கினைக்
கொண்டாட வேண்டும்!

அப்படித்தான்
நான்
முதலமைச்சராக இருக்கின்றவரை
நடக்காது என்று
டங்க்ஸ்டன் கனிம ஏலத்தை
ரத்து செய்ய வைத்திருக்கிறார்
தமிழ்நாடு முதல்வர்!

அவர்தான்
காலங்கள் மாறினாலும்
இப்போதும் நாம்
இரும்பின் பயன்பாட்டை
பண்பாடாகக் கொண்டிருப்பது போல
இரும்புக்கால ஆய்வில்
தமிழர்களின் பொற்கால வாழ்க்கையை
உலகுக்கு அறிவித்து.
உணர்த்தியிருக்கிறார்
“இப்போதும் ரோபோவாக
இருக்கப் போவதில்லை!”


**ம.ரா.**




– நன்றி
கணையாழி!
பிப்ரவரி
– 2025

# அண்ணா! அண்ணா! அண்ணா! எங்கள் அன்பின் தெய்வம் அண்ணா!

**வழக்கறிஞர்**
**வெ.அன்புவாணன்**
**கொள்கை பரப்பு துணைச் செயலாளர்**





பூவிதழின் மென்மையிலும், மென்மையான புனித உள்ளம்! அன்பு உள்ளம்! அரவணைக்கும் அன்னையுள்ளம் கொண்டு, உலக அரசியல் வரலாற்றில் இயக்கத் தொண்டர்களை தோழர்களாய், தம்பியராய் பாவித்து, பாசம் வைத்து, “தம்பிக்கு,” எனக் கடிதம் எழுதி, அண்ணன் தம்பி பாசப்பிணைப்பை கற்பித்து, காலதேவனின் கொடும் கரங்களில் கண்ணயரும் நேரம் வரை இனிய தம்பியர் புடைசூழ வலம் வந்த, அமைதிமிகு அண்ணா அவர்கள் நம்மையெல்லாம் கதறவிட்டுப் பிரிந்து, ஆண்டுகள் 56 ஆகிறது.

“அய்யோ! எங்களைத் தவிக்கவிட்டு ஏன் பிரிந்தாய்? எங்கு சென்றாய்? எனக் காலமெல்லாம் கதறிக்கதறி, மனம் பதறிப்பதறி துடிக்கவிட்டு நீடுதுயில் கொண்ட நாள் இந்த பிப்ரவரி 3.

சரித்திர பின்புலமின்றி, சாம்ராஜ்ய பெருமை ஏதுமின்றி, சாமானிய குடும்பத்தில் தோன்றி, தும்பை மலர் உள்ளத்துடன் தூய லட்சியங்களுடன் அருவிநடைத் தமிழால், ஆரியத்தின் மாயை தோலுரித்து அண்ணா! அண்ணா! என எந்நாளும் இளைஞர் படை துடிக்க வெற்றி உலா வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் நம்மைவிட்டுப் பெரும் பயணம் தொடர்ந்து சாவில்லாச் சரித்திரத்தில் இடம் பெற்ற நாள் பிப்ரவரி 3.

இசையால் வசமாகா இதயமுண்டோ? என்பார்கள். அதுபோல அண்ணாவின் நாவண்மைக்கு, வாதத்திறமைக்கு, நகைச்சுவை சிதறலுக்கு அன்றைய இளைஞர் உலகம் அவருக்கு கட்டுண்டு கிடந்தது.

தனது அரசியல் பொது வாழ்வை எப்படி எளிமையாக தொடங்கினாரோ, அதுபோலவே எளிமை பாதையில் கடைசிவரை தொடர்ந்த பெருமகன் பேரறிஞர் அண்ணா.

அவருக்கு அரசியலில் கோபம், நட்பில் வைராக்கியம் என்றெல்லாம் பெரிதாக இருந்ததே இல்லை.

அவரின் கொள்கையில் மாறுபாடு கண்டவர்கள் கூட, குளிர் தரும் அவரது அமுதத்தமிழில் இளைப்பாரிடவே எண்ணினர். அதை ஏற்றனர். மனதிற்குள் போற்றினர்.

தனது எண்ணங்களை தெளிவாக்கவும், வலியுறுத்தவும் கேட்போர் நெஞ்சில் பதிய வைக்கவும், உருவகங்களை பயன்படுத்துவதில் அண்ணா தன்னிகரற்று விளங்கினார்.

அந்நாளைய ஆட்சியாளர்களின் உல்லாசப் போக்கை, ஊதாறித்தனத்தை உணர்த்த வந்த அண்ணா, “கும்பியெரியுது! குடல் கருகுது! கோட்டை வாசிகளுக்கு, கோடை வாசம் ஒரு கேடா?’ எனச் சாடினார்.

அண்ணாவின் சொல்வன்மை மிகப் பெரிய தம்பியர் படையை அவருக்கேற்படுத்தியது. கையில் காசில்லாவிட்டாலும், மனதில் மாசில்லாமல் துடிப்போடு செயலாற்றும் தொண்டர்கள் வேறு எந்த இயக்கத்திற்கும் இதுபோல் அமைந்ததில்லை.

இப்படித்தான் அண்ணா என்று தனித்த அடையாளம் இல்லாமல் அண்ணனாய், தலைவனாய், எளியமனதினராய், புதுமை புத்தனாய், பொன்னாசை, பொருளாசை அற்றவராய், மேற்கத்திய சிந்தனை உணர்ந்தவராய், நாடக விற்பன்னராய், நவீன தமிழின் தூதுவராய் என்று இன்னும், இன்னும் எத்தனையோ சொல்லலாம்.

தந்தைப் பெரியாரை விட்டுப் பிரிந்த போதும் தனி இயக்கம் காண அவர் விரும்பவே இல்லை. காலச்சூழல் சுற்றியிருந்த நண்பர்கள், தோழர்கள், உயிரனைய தம்பியரின் உணர்வுகளுக்கு மதிப்பு என்ற நிலைப்பாடே அவரை திராவிட முன்னேற்றக் கழகம் காண தள்ளியது.

ஆரம்பத்தில் அண்ணா அவர்களுக்கு சென்னையில் வீடு இல்லை. அதை அவர் பெரிதாக விரும்பியது மில்லை. திமுக துவங்கும் முன் சென்னை வந்தால், அவரது துணைவியார் இராணி அம்மையாரின் சகோதரர் சிவசங்கரன் அவர்களது எண் 8. கருப்பண்ணன் தெரு, சென்னை 1ல் உள்ள வீட்டிலும், இரா. செழியன் மற்றும் பாவண்ணன் ஆகியோர் வாடகைக்கு எடுத்திருந்த சென்னை செம்புதாசு செட்டித்தெருவில் அடுக்கு மாடி குடியிருப்பில் 5 வது மாடியில் அமைந்திருந்த சிறிய அறை.

அதற்கு பின்னர் அண்ணாவின் நண்பர் டபிள்யூ. கே. தேவராஜன் அவர்களின் 182, கோவிந்தப்ப நாய்கன் தெரு இல்லத்திலும், திராவிட முன்னேற்றக் கழக தொடக்க கால அலுவலகம் அமைந்திருந்த எண்: 202 தங்கசாலைத் தெரு. நடிப்பிசைப்புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களின் இல்லம். மற்றொரு நண்பர் எஸ். எஸ். பி. லிங்கம் ஆகியோரது இல்லங்களிலும், பல நாட்கள் பேராசிரியரின் புரசைவாக்கம் இல்லம் என்று தான் அண்ணா சென்னை வந்தால் தங்குவார்.

1958 ல் தான் சென்னை நுங்கம்பாக்கத்தில் அண்ணாவிற்கென்று சொந்த வீடு, அவரது சிற்றன்னை ( தொத்தா ) இராசாமணி அம்மையார் மற்றும் அவரது நண்பர் வாலாஜாபாத் தேவராஜன் ஆகியோரின் பெருமுயற்சியால் ரூ. 35000 க்கு வாங்கப்பட்டது.

( இதைக் குறிப்பிடக் காரணம் தலைவர் கலைஞர் அவர்கள் சென்னை கோபாலபுரம் இல்லத்தை 1954 லேயே வாங்கி விட்டார். ).

இப்படி எளிமையின் உறைவிடமாக திகழ்ந்த அண்ணா தான் ஒரு மிகப்பெரிய சமூக அமைப்பின், முன்னணி அரசியல் கட்சியின் தலைவரென ஒரு நாளும் பெருமிதம் கொண்டதே இல்லை.

சமூகத்தின் மீதும், வேறு பட்ட கலை, பண்பாட்டின் மீதும் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அண்ணா அவர்கள் டெல்லிக்கு இரண்டு முறை காரிலேயே பயணம் சென்றார். போகும் வழியில் ஹம்பி, ஹைதராபாத், எல்லோரா குகை, அக்பரின் பதேபூர் சிக்ரி, தாஜ்மகால் போன்ற வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை பார்த்தும், ரசித்தும் பரவசமடைவார்.

அந்தந்த இடங்களின் வரலாற்று முக்கியத்துவத்தை உடன்வருவோருக்கு விளக்கி சொல்வதில் அவருக்கு அப்படி ஒரு மகிழ்ச்சி! அதோடு உள்ளூர் பயணம் என்றால், பெரும்பாலும் இரவில் தான் பயணம். போகும் வழியில் நடைபெறும் தெருக்கூத்து, நாடகம் போன்றவற்றை சற்று தள்ளி, தலையில் துண்டைக் கட்டிக்கொண்டு ரசிப்பதில் அவருக்கு மிகுந்த நாட்டம் இருந்தது. பகலில் எதிரே தென்படும் சிறு கூடை வியாபாரிகளிடம் தான் யாரென்று விபரம் சொல்லாமல், தின்பண்டங்கள் அனைத்தையும் மொத்தமாக வாங்கி, அந்த ஏழையருக்கு பேருதவி புரிந்தவர் எளிமையின் சிகரம் அறிஞர் அண்ணா.

தனக்குப் பின்னால், தன்னை விட சிறந்தோரை அடையாளம் காட்டுவதே ஒரு நல்ல தலைவனின் இலக்கணம் என்பார்கள்.

ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் தான் இருக்கும் போதே, தனது தம்பியராம் தலைவர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், மதியழகன் போன்றோருக்கு தனித்தனி அடையாளங்கள், பொறுப்புகள், போராட்ட, மாநாட்டு தலைமையை கொடுத்து , அவர்தம் சிறப்புகள் கண்டு பூரித்துப் போனார்.

இந்த உண்மை எனக்கு எப்படி தெரியுமென்றால் நான் தம்பி கருணாநிதிக்கு முன்பே நாடகத்துறைக்கு வந்தவன். நெடுஞ்செழியன் எப்போதும் என்னிடம் வந்து, சற்று நேரம் எனது குறிப்பையுணர்ந்து, கவனித்து, என்னிடம் திட்டும் வாங்கி, அண்ணா கோபமாத்தான் இருக்கிறார் என்று தாமதமாக புரிந்து கொள்வார். என்னை உணர்ந்தவர்களில் முற்றிலும் உணர்ந்தவர் தம்பி கருணாநிதி என்பேன். “ இப்படி தலைவர் கலைஞர் அவர்களை அண்ணா அவர்கள் பலமுறை அடையாளப்படுத்தியிருக்கிறார்.

இதோடு தனது தம்பிமார்க்கு, ஏதேனும் துயரென்றால் துடிதுடித்துப் போகும் தூய பாசப்பறவை பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தலைவர் கலைஞர் அவர்கள் புதுவையில் பொல்லாச் செயல்கொண்டோரால் கடுமையாக தாக்கப்பட்ட போது,

“ கருணாநிதியை எதிரிகள் இழுத்துப் போட்டு, அடித்து, பிணமானான் என்று கருதி, பெருஞ்சிரிப்பு சிரித்து விட்டு சென்றனர் என்பதைக் கேள்விப் பட்டவுடன் தம்பிக்கு வந்துற்ற ஆபத்தை தடுத்திடும் ஆற்றலும் அற்ற நிலையில் இருக்கிறேனே! என் போன்றோர் மொழி கேட்டும், காட்டும் வழி நடந்தும் பணியாற்றி, வாழ்க்கையைச் சுவைத்திடாப் பருவத்தனை மாபாவிகள் நொறுக்கினரே, அடிபட்ட போது, இரத்தம் கொட்டியபோது, கயவர் கத்தியைக் காட்டியபோது என்னென்ன எண்ணினானோ! எனக்கு ஒரு அண்ணன் உண்டு! அவன் சொல்லில் எனக்கு பற்றுண்டு! அவன் இருக்க நாம் அச்சம் அடையத் தேவையில்லை என்றெண்ணியிருந்தேன். இதோ, நான் கொல்லப்படுகிறேன் எங்கிருக்கிறான் என் அண்ணன்? என்றெல்லாம் எண்ணி திகைத்தானோ, இதுபோலெல்லாம் எண்ணிப் புதுவை யிலிருந்து விழுப்புரம் வந்து சேரும் வரையில் விம்மிக் கிடந்தேன். “ என்று தனது தம்பிக்கு நேர்ந்த துயர் கண்டு துடித்திட்டார் அண்ணா.

ஆனால் அதே அண்ணா அவர்கள் தான், 1962 ல் காஞ்சிபுரம் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பினை இழந்த பின்னர் அவரது உற்ற நண்பர் புட்டாசாமி ஐயரின் வற்புறுத்தலின் பேரில் பெங்களூர் செல்கிறார். அங்கு சென்ற அண்ணா அங்கிருந்து காஞ்சிபுரம் திராவிடநாடு இதழுக்கு இப்படி எழுதுகிறார் “ தம்பி, சட்டசபை தேர்தலில் தோற்ற நான் பெங்களுக்கு வந்திருக்கும் இடத்தின் பெயர் ஜெய் ( வெற்றி ) நகர். தங்கிருக்கும் வீட்டின் பெயரோ , ஜெயவிலாஸ் வேடிக்கை பார்த்தாயா? “ என்று தனது தோல்வியைக்கூட நகைச்சுவையாக்கிய பற்றற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

இப்படி வாராது வந்த மாமணியாய், தனது தீர்க்கமான எழுத்தால், ஆற்றொழுக்குத் தமிழால், நகைச்சுவை திறத்தால், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போமென்ற எளியோர் காவலனாய்த் திகழ்ந்த அண்ணா, தமிழரின் நெஞ்சமெல்லாம் எரிமலை வெடிக்க, இளையோர் துடிக்க, பெருங்கண்ணீர் வடிக்க, மீளாத்துயில் கொண்ட நாள் பிப்ரவரி 3.

உலகமே இருண்டதென ஓர் உணர்வு!

திக்கு தெரியாத காட்டில், இக்கட்டில் ஆழ்ந்தது போன்ற தவிப்பு!

வக்கற்று போனோமோ? வாழ வழியற்றுப் போகுமோ? என தமிழரெல்லாம் அவரவர் நிலையில் அழுது, அரண்டு, அபயம் தேடினர்.

இடையே ஓர் குரல்!

அது,

அண்ணாவின் இதயச்சிந்தனையாய், எழுத்து, பேச்சு, நாடகம், கலை, இலக்கியம், திரை, தெளிந்த மனம், தொலைநோக்குப் பார்வை, சமூக மதிப்பீடு, தோல்வியிலும், துரோகத்திலும், துவளாத நெஞ்சுரம், இவையும், இன்னும் எண்ணற்ற சாயல்கொண்டு, அண்ணாவின் நிழலாய் தொடர்ந்த உருவம், அவரது இதயத்தை யாசித்து நின்றது.

அந்த உருவம், படைநடத்த, பகை முடிக்க, தடையுடைக்க, தமிழரை வழிநடத்த, பண்பட்ட அண்ணாவின் வெண்பட்டு இதயத்தை அன்று வேண்டி நின்று, அண்ணாவாய் உருகொண்டு, இன்னா செய்தாரையும், அவர் நாண, நன்னயம் செய்த நமது இனத்தலைவர் கலைஞரவர்கள்.

அந்தத் தலைவனின் வளர்ப்பாய், வார்ப்பாய், அதே பகுத்தறிவுச் சிந்தனையுடன், சுயமரியாதை பாதையில் நாம் பாதுகாப்பாய் பயணிக்க, ஆரிய வருணாசிரம கேடுகளை களைய, நாளும் சுழலும் சூரியனாம், நம்முயிர் தலைவர், திராவிடப் பேரசர் தளபதியர்கள் அண்ணாவின் 56 வது நினைவுநாளாம் பிப்ரவரி 3 ம் தேதியன்று சென்னை வாலாஜா சாலை அண்ணா சாலையிலிருந்து காலை புறப்படும் அமைதிப் பேரணிக்கு தலைமையேற்கிறார்.

உலக வரலாற்றில் ஒரு இயக்கத்தை கட்டியமைத்த, தலைவர் மறைந்து, அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக, அவரை ஆட்சியில், கட்சியில் அணுப்பொழுதும் மறவாமல், கல்லூரிகள், கலாமண்டபங்கள், நினைவாலயம், நூலகங்கள், எண்ணற்ற மக்கள் நல திட்டங்கள் என சுவாசிக்கும் வாசிப்பாகவே, அண்ணா! அண்ணா! என உருகிய தலைவர் கலைஞர் பாதையில் தொடரோட்டமாய் பேரறிஞர் புகழ் போற்றும் இயக்கம் வேரேதும் கண்டதில்லை.

அண்ணாவின் கனிவும், அவர் தலைவர் ஐயா பெரியாரின் துணிவும் கொண்டு நமை வழிநடத்தும் மாண்புமிகு தளபதியவர்கள் பின்னால் அணிவகுப்போம்!

அண்ணாவின் பெருமை சொல்லி!

கண்ணான தலைவர் கலைஞரின் தம்பியராய் தலைநகர் சென்னையில்!

ஓங்குக பேரறிஞர் அண்ணா அவர்களின் பெரும்புகழ்!

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. முருகேசன்
### பிப்ரவரி 3 (2003)



**இளம்வயதிலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, காஞ்சிபுரம் ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து 7 முறை பொறுப்பேற்று, முப்பது ஆண்டுகள் கழகப் பணியாற்றியவர்.**

**மேல் ஒட்டிவாக்கம் ஊராட்சிமன்றத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் – காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1989, 1996 ஆகிய இருமுறை காஞ்சிபுரம் தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு காஞ்சிபுரத்தில் திருப்பாற்கடல் குடிநீர் திட்டத்தையும் – பாலாற்றின் குறுக்கே உயர் மட்ட பாலங்களையும் கழக ஆட்சியில் கொண்டு வந்தார்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திருத்துறைப்பூண்டியில் தெருமுனைப் பிரச்சாரம்!

திருவாரூர், பிப்.2–

திருவாரூர் மாவட்ட இலக்கிய அணியின் சார்பில்திருத்துறைப்பூண்டி நகரத்தில் தெருமுனை பிரச்சாரம் நடைபெற்றது. நகர செயலாளர் ஆர்.எஸ். பாண்டியனின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சோம.இளங்கோவன் ,அணி அமைப்பாளர் புலவர் எண்கண்.ச.மணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கழக தலைவர், தமிழ்நாடு முதல்வர், திராவிட நாயகர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்களின்படியும் , மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆலோசனைகளின்படியும் திருவாரூர் மாவட்டஇலக்கிய அணியின் சார்பில் மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுதிகளில் தெருமுனை பிரசார கூட்டங்கள் நடைபெற்று வருகிறது.

மண்ணின் மைந்தர் கலைஞர் அவர்களின் நூறாண்டு நிறைவு, திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், துணைமுதல்வர் உதயநிதி அவர்களின் பிறந்தநாள் ஆகியவற்றை முன்னெடுத்து நடைபெறும் இந்த பிரசாரம், திருத்துறைப்பூண்டி நகரப்பகுதியில் காமராஜர் சிலை அருகே நடைபெற்றது.

பிரசாரக்கூட்டத்திற்கு நகர செயலாளர் ஆர்.பாண்டியன் தலைமை ஏற்க திமுக பேச்சாளர் சோம.இளங்கோவன்பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் தங்க. குணசேகரன், நல்லாசிரியர் செல்லத்துரை,தெ. தியாகராஜன் ஆகியோரும் , பிரச்சார உரையாற்றினார் . மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர்கள் ஜாகிர் உசேன், பால.முத்து, சோமசுந்தரம் மற்றும் முன்னாள் ஒன்றிய செயலாளர் முகில் இராஜேந்திரன்,மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் சிக்கந்தர், ஐ.ஜி. எஸ்.ஜாகிர்உசேன், ஓம்சக்தி.கண்ணன் அவைத்தலைவர் சிதம்பரம்,மாவட்ட பிரதிநிதிகள் சக்திவேல்,பன்னீர் செல்வம், பாலு, ஆர்.எஸ்.சுந்தர்,இளைஞர் அணி நகர அமைப்பாளர் வசந்த், இலக்கிய அணி அமைப்பாளர் துரை, காளிதாஸ், கவிஞர் உதயகுமார்,பாலசுந்தரம் மற்றும் மாநில, மாவட்ட ,ஒன்றிய நிர்வாகிகள்,கழக தோழர்கள் பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.